எதிர உணவாக
குளிர்க்க றாடில்லி வகைகள்
நிக்கோ
சோப்பினை அரைத்துப்
பெற்றுக் கொள்ள
செந்தாமரை
(நிக்கோ)
870, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

★ ஐஸ்கிறீம் வகைகள்
★ பானந்தர சர்பத்
★ மிக்க புகழ் ஜுஸ்களும்
செந்தாமரை
(நிக்கோ)
குளிர் தடாகம்
870, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 07 சனிக்கிழமை (23 – 07 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 237

கிழக்கில் வாக்கு வேட்டையின் மத்தியிலும் படையினரின் தேடுதல் வேட்டை தீவிரம்

கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 23
கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்திற் நடைபெறும் என்று வடமாகாண புலிகளின் அரசியல் நடுவப் புலிகளின் அரசியல் நடுவப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-5)

ஹெய்ட்டியில் இராணுவ நடவடிக்கை

ஐ. நா. வின் அங்கீகாரத்தை அமெரிக்கா கோருகிறது

வாஷிங்டன், ஜூலை 23

ஹெய்ட்டி மீது இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு அமெரிக்கா ஐ. நா. பாதுகாப்புச் சபையின் அங்கீகாரத்தைக் கோரி உள்ளது.

இராணுவ ஆட்சியாளர்களினால் பதவியில் இருந்து நீக்கப்பட்ட, மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஜான் பேர்ட்ரண்ட் அரிஸ்டைடை மீண்டும் ஆட்சியில் அமர்த்தும் அமெரிக்காவின் சமாதான முயற்சிகளும் தோல்வி அடைந்து விட்டன என்று கருதப்படுகிறது;

அரிஸ்டைட் அமெரிக்காவில் தஞ்சம் அடைந்துள்ளார்.

ஹெய்ட்டி இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் செட்ராஸ் சம்பந்தமாக ஹெய்ட்டியில் இருந்து மனித உரிமைகள் இயக்க அவதானிகளை வெளியேற்றி இருந்தார்.

அத்தடன் இராணுவ ஆட்சிக்கு எதிரானவர்கள் கொலை செய்யப்படும் சம்பவங்களும் ஹெய்ட்டியில் அதிகரித்திருந்தன. (இ)

ஓய்வுபெற்ற படையினர் சேவைக்கு அழைப்பு

கொழும்பு, ஜூலை 23

இலங்கை இராணுவத்தில் நிரந்தர அல்லது தொண்டர் படையில் இருந்து ஓய்வு பெற்ற அல்லது ராஜினாமாச் செய்த அதிகாரிகளையும் ஏனைய தரத்தினரையும் மீண்டும் சேவைக்கு வருமாறு அரசினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நிரந்தரப்படையில் சேவையாற்றியவர்கள் கொழும்பு, இராணுவ கிரிக்கெட் மைதானத்திற்கு சமுகமளிக்குமாறும் — தொண்டர் படையில் பணியாற்றியவர்கள் பத்தரமுல்லையில் உள்ள தொண்டர்படை அலுவலகத்துக்கு சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (இ-எ)

வடமராட்சியில் அவ்ரோ நோட்டம்

மக்கள் பதற்றம்

வல்வெட்டித்துறை, ஜூலை 23

வடமராட்சி பகுதி மீது நேற்று காலை 6 மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்று பறந்தவாறு சுற்றி நோட்டமிட்டது. இதனால் அப்பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது;

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, தொண்டமானாறு கரையோரப் பகுதிகளின் மீதே பறந்தவாறு அவ்ரோ நோட்டமிட்டது.

நேற்று முன்தினமும் கடந்த புதன்கிழமையும் அதிகூடிய இடம் பெற்ற விமானக் குண்டு வீச்சுக்களினால் பதற்றமடைந்திருந்த மக்கள் நேற்று காலை விமானத்தை கண்டதும் அச்சமடைந்தனர். (ஜ-155-15)

யாழ். மாவட்டத்தில்

அரசதனியார்நிறுவனங்களில் பயிலுநர்களாக 700 பேர்!

உடனடியாக நியமனம் பெறுவர்

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ் மாவட்டத்தில் உள்ள அரச தனியார்நிறுவனங்களில் உடனடியாக 700, பேர் பயிலுநர்களாக நியமனம் பெறவிருக்கின்றனர்.

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் வடக்கு-கிழக்கு முகாமையாளர் திரு. ம. கிரியோக சுந்தரம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் அனுமதியுடன் உடனடியாக பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்க இவர்கள் நியமிக்கப்பட விருப்பதாகவும் — பயிற்சிக்காலத்தில் 450ரூபா மாதாந்தம் அலவன்ஸ் வழங்கப்படும் என்றும்— அவர் தெரிவித்தார்.

எழுதுனர்,தையல் காரர், கிராமிய சுகாதார உதவியாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள், ஒப்படுநர், நூலகர் போன்ற பதவிகளுக்கு இவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்;

தேசிய மட்டத்தில் கிளிநொச்சி பகுதியில் 300பேரும் — திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் ஆயிரம் பேரும்— நியமனம் பெறவிருக்கின்றனர். (ஒ-8)

99 கிராம சேவையாளருக்கு அடுத்த மாதத்தில் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ். மாவட்டத்தில் அடுத்த மாதம் முதல் 99 புதிய கிராம சேவையாளர்கள் நியமனம் பெற விருக்கின்றனர்;

கிராம சேவையாளர்களை தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய 99 பேர் தற்சமயம் யாழ். மாவட்டத்தில் உள்ள பல்வேறு திணைக்களங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மாகாண சபை மேற்கொண்டுள்ளதாகவும் —

அடுத்த மாதம் முதல் இவர்களுக்குரிய பிரிவுகள் அறிவிக்கப்படும் என்றும் — மாகாணசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-3)

தமிழ்ப் பெண்களுக்கு இம்சை; குடும்பப்பெண் ஒருவர் தற்கொலை

கொழும்பு, ஜூலை 23

கிழக்கில் பொதுத் தேர்தலுக்காக அரசியல் கட்சிகள் நடத்தி வரும் வாக்கு வேட்டையின் மத்தியில், படையினர் தேடுதல் வேட்டைகளைத் தீவிரப்படுத்தி உள்ளனர்;

விடுதலைப் புலிகளைத் தேடுவதாகக் "கூறிக்கொண்டு அடிக்கடி சுற்றிவளைப்பு, தேடுதல் என்று தமிழ் மக்களுக்குத் தொல்லை கொடுக்கின்றார்கள்,

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அதிரடிப் படையினர் தமிழ்க் கிராமங்களில் இரவு, பகல் என்றில்லாமல் வீடுகளைச் சோதனையிட்டு பெண்களை இம்சைப்படுத்துகிறார்கள்;

அதிரடிப் படையினரால் இம்சைப்படுத்தப்பட்ட தமிழ்க் குடும்பப் பெண் ஒருவர் அவமானம் தாங்காமல் தற்கொலை செய்துள்ளார்;

கிழக்கில் தமிழ், முஸ்லிம், சிங்களக் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களும், அவர்களின் ஆதரவாளர்களும் போட்டி போட்டுக்கொண்டு வாக்கு வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். பிரசாரக் கூட்டங்கள் முன்முரமாக நடக்கின்றன. தேர்தல் மோதல்களும் தாராளமாக இடம்பெறுகின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு மாகாணசபை அச்சுறுத்தல்

மகாநாயக்க தேரர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 23

மாகாணசபை முறை நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் சிங்கள இனத்துக்கும் பாதகமானதாகும்.

அஸ்கிரிய மகாநாயக்க தேரர் பலிபான சந்தானந்த தேரர் கடந்த வாரம் தம்மைச் சந்தித்த ஆசியெற்ற மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திலேஷ் குணவர்த்தனாவிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியிலும் வெளிநிலும் சிங்கள மக்களின் உரிமைகளையும் சிறப்புச் சலுகைகளையும் பாதுகாப்பதற்கு திலேஷ் குணவர்த்தனா ஆற்றி வரும் சேவையை மகாநாயக்கதேரர் பாராட்டினார்.

"வடபகுதியில் தனிநாடு கோரி தமிழர் யுத்தம் நடத்துகின்றனர். நாட்டின் இன்னொரு பகுதியை அரசாட்சி கோரி வருகின்றார்' இப்படி நாடு ஒவ்வொரு துண்டாகப் பிரித்துக்கொண்டு போனால் சிங்கள இனத்துக்கு என்னதான் மிஞ்சி கிடைக்கப் போகிறது? "— என்று திலேஷ் குணவர்த்தனா மகாநாயக்கரிடம் தெரிவித்தார். (இ-எ)

பொதுஜன ஐக்கிய முன்னணி நாட்டைப் பிரிப்பதற்குச் சதி

ஜனாதிபதி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 23

நாட்டைப் பிரிப்பதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மேற்கொண்டுள்ள சூழ்ச்சி அம்பலமாகியுள்ளதாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்திருக்கிறார்.

மதவாச்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த ஐ.தே.க. பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி இத்தகவலை வெளியிட்டார்.

அனுராதபுரம் மாவட்டத்தில் போட்டியிடும் ஐ.தே.க. வேட்பாளர்களை ஆதரித்து இக்கூட்டம் நடத்தப்பட்டது.

அவர் மேலும் சொன்னதாவது;

நாட்டைப் பிரிப்பதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சதி செய்து வருவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது இது சம்பந்தமாக முன்னணி மேற்கொண்டுள்ள சதி, நம்பகமான வட்டாரங்கள் மூலமாக அம்பலமாகியுள்ளது;

ஐக்கியதேசியக் கட்சி எப்பாடு படுவாவது நாட்டின் ஐக்கியம், ஒருமைப்பாடு, இறைமையை பாதுகாக்கும் என்றும் தெரிவித்தார். (இ-எ)

தேர்தல் வன்முறைகளுக்கு சுவரொட்டிகளே காரணம்

கொழும்பு, ஜூலை 23

தேர்தல் வன்செயல்களுக்கு வேட்பாளர்களின் சுவரொட்டிகள் தான் பிரதான காரணமாக இருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர்.

இச்சுவரொட்டிகள் சூழல் பிரச்சினையை உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு ஏற்படுத்தி உள்ளதாலும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் பிரசாரங்களுக்கு பாதுகாப்பளிக்கும் பொலீஸார் மேலதிகமாக சுவரொட்டிகளையும் பதாகைகளையும் அகற்றும் வேலையிலும் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நிலமைப்பற்றிநிற்கள் நாளாக நிலைமை இருந்து இதுவரை 6 கொலைகள் இடம்பெற்றுள்ளன. பக்க மூலையில் இருவர் கொல்லப்பட்டனர், ஏறாவூர், வவுனியா, களுத்துறை ரத்தினபுரி பகுதிகளில் தலா ஒருவர் கொல்லப்பட்டார்.

தேர்தல் வாக்களிக்க விபத்துக்குள்ளாகியதால் மூன்று பேர் இறந்தனர். (இ-எ)

முச்சந்தி மூளி

தேர்தல் பிரசாரம் டி.பி. யர் பிரதேசத்தை [illegible] டார் போல.....!

காணாமற்போன மீனவர் கடலில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

அராலி கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் மீது கடந்த ஞாயிறு அதிகாலை படையினர் நடத்திய தாக்குதலில் காணாமற்போயிருந்த [illegible] சடலமாக மீட்கப்பட்டார்.

அவரைக்கோட்டை சாவற்காட்டைச் சேர்ந்த கப்பிரமணியம் உதயராசா (வயது 18) என்பவரே இறந்தவர் ஆவார்.

பிரஸ்தாப மீனவரின் சடலம் [illegible] தலைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டு காயம் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஜ-15)

பரீட்சை நிலையத்துக்கு அருகில்

ஒலிபெருக்கிகளை பயன்படுத்த தடை

கொழும்பு, ஜூலை 23

ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சை நடைபெறும் நிலையங்களில் இருந்து ஒரு கிலோ மீற்றர் வரை ஒலிபெருக்கி பாவிக்கப்படுவதை பொலீஸார் தடைசெய்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த ஒரு கிலோ மீற்றருக்குள் ஒலிபெருக்கி பாவித்து கோர்த்த கூட்டங்கள் நடத்துவதற்கு பொலீஸார் அனுமதியளிக்க மாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சைத் திணைக்களம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து பொலீஸார் இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளனர்.

பரீட்சைகளைக் குழப்பக் கூடிய விதத்தில் பிரசாரங்கள் நடத்தும் வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையைப் பற்றாக பரீட்சை நிலையங்களுக்கு அருகில் மேதிக பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-எ)

குமார் பொன்னம்பலத்தின் முதலாவது பிரசாரக் கூட்டம்

மருதானையில் நடந்தது

கொழும்பு, ஜூலை 23

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் குமார் பொன்னம்பலம் தலைமையிலான சமேச்சைக்குழுவின் முதலாவது பிரசாரக் கூட்டம் கடந்த வாரம் மருதானையில் நடைபெற்றது.

இந்த சமேச்சைக்குழுவில் கொள்கையை விளக்கும் கருத்தரங்குகள் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொட்டாஞ்சேனைப் பகுதிகளில் கடந்த வாரங்களில் நடந்தன.

முதலாவது பிரசாரக் கூட்டம் மருதானை கம்பித்தபாலத்தை அமையத்துக்கு அருகில் நடந்த சமயம் இந்த சபைகளின் பிரதிநிதிகள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் உரையாற்றினார்கள் என்றும் —

ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து வேலிய கொடை, கிராண்ட்பாஸ், கொட்டாஞ்சேனைப் பகுதிகளில் மொத்தம் கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன. (ஒ-3)

தேர்தல் முடியும் வரை நரேந்திரா காங்கேசனுக்கே!

யாழ்ப்பாணம், ஜூலை 23

'நரேந்திரா, கப்பல் பயணக் சேவை இனி காங்கேசன் துறை வரையுமே நடைபெறும் என்றும்—

பாதுகாப்பின் நிமித்தம் அக்கப்பல் தேசதக் முடிவடையும் வரை, பருத்தித்துறைக்கு வாரமாட்டாது என்றும்— கடற் படையினர் அறிவித்துள்ளனர் என்று தெரியவருகிறது.

திருகோணமலையில் இருந்து வரும் பயணிகள் காங்கேசன்துறையில் இருந்து இணைப்பு கப்பல் சேவை மூலம் பருத்தித்துறைக்கும்—

பருத்தித்துறையில் இருந்து திருகோணமலைக்கு செல்லும் பயணிகள் இணைப்பு கப்பல் சேவை மூலம் காங்கேசன் துறைக்கும்- அழைத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக

தமிழீழ ஆடிவேல் விழா திங்களன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக தமிழீழ ஆடிவேல் விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை கோலாலமாக ஆரம்பமாகிறது.

நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ பாக்கதிர்காம தேவஸ்தான ஆடிவேல் விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

ஆலய பரத்தேரில் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆலயத்தில் இருந்து முருகப் பெரும் வீதி பவனி புறப்படும் மூன்று நாட்களும் பல இடங்கள் ஊடாகச் சென்று முருகன் பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்.

இந்த விழாவையொட்டி விசேட இசை நிகழ்ச்சிகளும் ஆங்காங்கே ஏற்பாடு செய்யப்படுகின்றன.

பவனி செல்லும் பாதைகள் விபரம் வருமாறு:-

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரிய சேவையை நிறுவ ஜனாதிபதி டி. பி. உத்தரவு

கொழும்பு, ஜூலை 23

இலங்கை ஆசிரியர் சேவையைத் தமதமிறி நிறுவுமாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா உத்தரவிட்டுள்ளார்.

இந்தப் புதிய சேவையைத் தொடங்குவதற்கான சகல அதிகாரங்களும் கல்வி அமைச்சர் அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளன

ஆசிரியர்களின் நீண்டநாள் கோரிக்கையான ஆசிரியர் சேவையை நிறுவவேண்டும் என்று அமைச்சரவை முடிவு செய்தது.

நாட்டில் உள்ள பல்வேறு ஆசிரியர் தொழிற்சங்கங்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இலங்கை கல்வி சேவை போன்று இலங்கை ஆசிரியர் சேவையையும் நிறுவவேண்டும் என்று கல்வி அமைச்சர் கொக்கு பண்டார அமைச்சரவைக்குச் சிபார்சு செய்திருந்தார்.

அதற்கேற்ப பல்வேறு தரத்தில் சம்பளம் பெற்றுவரும் ஆசிரியர்களை ஐந்து தரத்தின் கீழ் வருந்த நடைமுறைப் (4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

மேசை, கதிரை செற்றி, அலுமாரிகள், சமுகு சாதன கண்ணாடி மேசை, லாயன் மெஷின், சோக்கேஸ், கடைக் குரிய கவுண்டர் மேசை, சாப் பாண்டு மேசை, சொப்பர் வாக்கிங் ½ வாக்கின் வாங்கு விருப்பின் விற்பனைக்குண்டு. தொடர்பு: 07, வைரவ பிள்ளையார் கோயில் பின் வீதி, நல்லூர். [32006]

எரு விற்பனைக்கு

எமது சம்பத்தில் எரு விற்பனைக்குண்டு வாங்க விரும்புவோர் அலுவல நேரத்தில் பார்வையிட்டு நல்ல கூடிய விலையினை 30-07-94ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பாக அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும். தவறாக உறையில் இடுதல்கள் மேல் முறையில் எரு கூறுவிலை என குறிப்பிடவும். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு. கோப்பாய். (சி-8777)

பாலமுருகன் வர்ணப்படம்

தமிழீழ ஆடி மாத உற்சவத்தை முன்னிட்டு பாலமுருகன் பல வர்ணப்படம் ஆன்மிகப்பரசு, மிக்கவைற் சலவைப் பவுடர் 450 கிராம் வாங்கியவர்களுக்கு வழங்கப்படுகிறது. "மிக்கவைற்". [சி-8767]

ஆனந்தம் சீயாக்காய்

எமது உடம்புக்கு ஒரே பிரதானம். ஆகவே சித்த மருத்துவ முறைப்படி தயாரிக்கப்பெற்ற ஆனந்தம் சீயாக்காய் பவுடர் என்று கேட்டு வாங்கி பயன்பெறவும். மொத்தமாக கிடைக்குமிடங்கள்: ராஜபாலன் ரேடர்ஸ் சுன்னாகம், சனா பத்திரிகை நிலையம் நிருநெல்வேலி, அம்பிகை களஞ்சியம் யாழ்ப்பாணம். பவானி களஞ்சியம் நீர்வேலி, மு. சச்சிதானந்தர் பருத்தித்துறை. (7487)

மணிக்கூடுகள் திருத்துதல்

சகல மணிக்கூடுகள், ரேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ளலாம் வார்ச் ஆர்ட் ரேடியோ வேர்க்ஸ், ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி, தவராஜமயம் 264, வாணவிதி கருகில் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (இ-8299)

புலமைப் பரிசில் பரீட்சை

புலமைப்பரிசில் தரித மீட்டற் பயிற்சியைப் பெறாத மாணவர்கள் வாரந்தோறும் படித்து பயனடையுங்கள் ஞாயிறு தோறும் வெளிவிடப்படும் வினாத்தாள்கள் எடுத்துச் செய்யாதவர்கள் உடன் எடுத்துச் செய்யுங்கள். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி நிச்சயம் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (32019)

சில்லாலை யாகப்பர் ஆலய திருநாள்

சில்லாலை புனித யாகப்பர் ஆலய திருநாள் முன்னர் குறிக்கப்பட்டது போன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7-15 மணிக்கு நடைபறுமென தெரிவிக்கப்படுகிறது.

இன்று பிற்பகல் 4 30 மணிக்கு நற்கருணை ஆசீர் வாதமும். நாளை காலை 7-15 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலியும், திருச்சொரூப பவனியும் இடம் பெறுமென பங்குத்தந்தை வண- அ. பெ பெனற் அடிகள் தெரிவித்தார். (இ-51)

ஐ. தே. க அமைச்சர்கள் பதவி ஏற்பு

கொழும்பு, ஜூலை 23 வடமேல் மாகாண சபை அமைச்சர்களாக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள் நேற்று முன் தினம் பதவி ஏற்றனர்.

இது தொடர்பான பதவிப் பிரமாணம் மாகாண ஆளுநர் ஆனந்த நிலை டி சில்வாவினால் நடத்தி வைக்கப்பட்டது. (இ-எ-6)

உரும்பிராய்

சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில்

கதிர்காமத் தீர்த்தம்

குறித்த கதிர்காமத் தீர்த்தத்திருவிழா நாளை (24-07-94) ஞாயிறு காலை விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகும்.

முற்பகல் 8-00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்றுத் தொடர்ந்து தீர்த்தம் நடைபெறும்.

முற்பகல் 11-00 மணி

உற்சவ காலங்களில்

மஹாபாரதம் என்னும் பொருளில்

தொடர் சொற்பொழிவாற்றிய

ஆசிரியர் செ. சத்தியமூர்த்தி அவர்கள்

"பிரசங்க பூஷணம்"

என்னும் பட்டம் சூட்டப்பெற்றுக் கௌரவிக்கப்படுவார்கள்.

அறிஞர்கள் பலர் பாராட்டுரை வழங்குவார்கள்.

அனைவரும் சமுகந் தருக.

ஆலய பரிபாலன சபை.
சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில்.

உரும்பிராய். (32050)

9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 07 — 08 — 1940

மறைவு: 23 — 07 — 1985

திருமதி

லூட்ஸ் மாக்கிறெட் றோஸ் தேவதாஸ்

(சறோஜினி)

துன்பமாம் உலகை விட்டுத்
தூயவன் பாதம் சேர்ந்த
அன்னையே உன் நினைவால்
இன்றுமே வாடுகின்றோம்
ஒன்பது ஆண்டுகளும்
ஓடோடி மறைந்தனவே
என்றுன்னைக் காண்போமென
ஏங்கித் தவிக்கிறோம்.

அன்புக் கணவன், பிள்ளைகள்,
சகோதரர், உறவினர்கள்.

466/2 B, யுவாவிமார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (32049)

ஓராண்டு நினைவஞ்சலி

நவநீதகிருஷ்ணன் தேவதாசன்

(தேவன்)

(இடைக்காடு மகாவித்தியாலய உயர் வகுப்பு மாணவன்)

அன்னை மடியில்: 14-06-1974
ஆண்டவன் அணைப்பில்: 04-08-1993

திதி: **24-07-1994**

இரு கண்ணின் ஒளி மணியே!
இதயமெல்லாம் ஆன்புதேன் பொழிந்த பூவே
நீ இன்றி எப்படித்தான் தேறுவோம்
உதயமெழுஞ் செங்கதிரே தேவகுமாரா,
ஓராண்டாய் பாசவழியும் முகம் காணாதே
நிதமழுதே நெஞ்சுருகிக் கண்ணீராற்றில்
நீந்தியுனைச் சாந்தியிலா தேங்குகின்றோம்
அதிமதுரப் பேரின்ப மனை வாழ்கின்றாய்
அமரனுகும் திருவமுதம் அளித்தாராய்
தேவா உனைத் தேடுவோம் தேடியும் காணாத
துயரோடு வாடுகின்றோம்.

என்றும் உன்பிரியால் துயருறும்:
அப்பா, அம்மா,
சகோதர, சகோதரிகள்,
மைத்துனர் மற்றும் உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

"பிருந்தாவனம்",
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 05 — 01 — 1953

மறைவு: 23 — 06 — 1994

அமரர்

DR. (டாக்டர்) ஞா. பத்மஜெயன்

நினைவு நாள் 23-07-1994 சனிக்கிழமை

மகனே,

தவப் பயனாய் உதித்து, தலைமகனாய் விளங்கி ஆய் இரு பெண் ஒர் ஆண் உன் உடன் பிறப்பாக மகிழ்வாய் வாழ்ந்தாய்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவத்தில் பட்டம் பெற்று 1977 — 1986 ஆம் ஆண்டு வரை கடமை புரிந்தாய்.

1984 ஆம் ஆண்டு அனுசுயா தேவியைத் திருமணம் செய்து 1986 ஆம் ஆண்டில் சதி நிமித்தம் நைஜீரியா சென்றாய்.

1994 ஆம் ஆண்டு ஆனி 27ஆம் திகதி நீ மரணச் செய்தி கேட்டு நாளும் எம் பதிவிலும் ஆறாத் துயரம் அடைந்தோம். முன் செய்த கர்ம வினை முடிவடைந்தாலோ இறைவன் நின்னை இளம் வயதில் அழைத்து விட்டார்.

உமது மரணச் செய்தி கேட்டு எமக்கு ஆதரவு காட்டி தேறுதல் கூறி ஆறுதல் அளித்த அத்தனை பேருக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்றைய (23-07-1994) மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சுக துக்கமறியா ஈசன் பாதமலர்களில் நீர் சரண் அடையப் பிரார்த்திப்போமாக!

திரு திருமதி க. ஞானசம்பந்தர்.

"மிதிலை",
சுதுமலை வடக்கு. [7543]

முதலாம் வருட நினைவஞ்சலி

பிறப்பு: 27 — 07 — 1930

இறப்பு: 23 — 07 — 1993

சபாரட்னம் விசென் ஜெயராஜசிங்கம்

(முன்னாள் பெருந்தெருக்கள் திணைக்கள தொழிற்நுட்ப உதவியோகஸ்தர்)

ஆண்டொன்று சென்றிடினும்
நீங்காத நினைவுகளுடன் உங்கள்
பிறப்பினையும் இறப்பினையும்
நினைந்து துயருறும்:

— குடும்பத்தினர்.

மீசாலை வீரவாசம்,
உடுவில். (7541)

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

காரைநகர் புதுறோட்

அமரர் முத்தையா இராசையா

மறைவு: 23-07-1988

ஆன்பாலும், பண்பாலும், பாசத்தாலும் நல்வழி காட்டி எல்லித் துன்பங்களும் எம்மை அணுகாமல் வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே!

நீங்கள் எங்களை கட்டுப்பிரிந்து ஆண்டு ஆறாவாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு அகலாது: உங்கள் ஆத்மாசாந்தியடைய, இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரியால் வாடும்:
மக்கள்.

வெளிவந்து விற்பனையாகிறது.

இலங்கை நிருவாக சேவைக்குரிய
S.L.A.S. விலை **175/-**
இலங்கை கல்வி நிருவாக சேவைக்குரிய
S.L.E.A.S. விலை **215/-**

வெளியீடு:
ஏஸ்ரன் பதிப்பகம்

எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம்.

(சி/8642)

WESTERN MUSIC CLASSES

At City Mission 41, 4th Cross Street Jaffna.

G.C.E. (O/L)
G.C.E. (A/L)
Trinity College
Royal College

Applications Close On 01-08 1994
Classes Commence On 06-08 1994

Apply On Forms Available At City Mission
Office Hours 8 30 A M To 3 30 P M.

Rev. S. I Anandarajan
PASTOR

[சி/8778]

சாவரம் மூன்றாம் ஆண்டு நிறைவு சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வு

சாவரம் இணையோர் திங்களிதழ் தனது மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி கதிரவக்கங்களுடன்சிறப்பிதழாக வெளிவருகின்றது.

சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வு

நாளை 24ம் திகதி ஞாயிறு காலை 9 30 மணிக்கு,
யாழ். இந்துக்கல்லூரி
குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

வாசகர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சாவரம்
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(32052)

31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர் சின்னப்பு சிங்கநாயகம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுலகுற்றவரும் தெல்லிப்பழையைச் சேர்ந்தவருமான அமரர் சின்னப்பு சிங்கநாயகம் அவர்களின் ஆன்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:

-ஆசிரியர் கழகம்,
யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை. (7544)

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 20 — 06 — 1969

ஆண்டவன் அடியில்: 23 — 07 — 1989

செல்வன் மகாலிங்கம் மகேஸ்வரன்

நினைத்து மிருக்க மாயிடாய்
உன் காலம்
இத்துணை குறுகியது என்று
உனது இறப்பின் போது
நாம் உணர்ந்து கொண்டோம்
எமது இருப்புக்கவின்
நிச்சயமின்மையை!
எமது ஆருயிரே!
போய் ..... வா.....
இந்த நாவிலம்
இருக்கும் நாள்வரை
உனை நினைந்திருப்போம்.

உன்னன் பிரியால் வாடும்:
— குடும்பத்தினர்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (7532)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

வாக்கும் வீம்புப்!

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் வடபகுதிக்கு அத்தியாவசியப் பொருள்களை அனுப்புவதில் சிக்கல் நிலை ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ள தாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வடபகுதி மக்களுக்குத் தேவையான பொருள்களை அனுப்பி வைக்கும் பொறுப்பு யாருடையது என்னது குறித்து எழுந்துள்ள குழப்பமே இந்த நிலைக்குக் காரணமாம்.

யுத்தம் தொடங்கிய சில மாதங்களில் வடக்கு – கிழக்குப் பிரதேசங்களுக்கான அத்தியாவசிய சேவைகளைக் கவனிக்கவும், யுத்தப் பிரதேசத்திலிருந்து அகதிகளாகி தென்பகுதிக்கு இடம்பெயர்ந்தவர்களுக்கு உரிய அத்தியாவசிய சேவைகளைக் கவனிக்கவுமென அத்தியாவசியசேவைகள் ஆணையாளர் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டது.

பிரஸ்தாப அத்தியாவசிய சேவைகள் பிரிவு, அவசரகாலச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்குட்பட்டே அமைக்கப்பட்டிருந்தது. இப்போது அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்படாவிடினும், அது நீக்கப்பட்டிருந்தால் அத்தியாவசிய சேவைகள் பிரிவு இயங்க முடியாது என்றும்—

வடக்குக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களை அனுப்பும் பொறுப்பு உரிய குரியது என்ற குழப்பநிலை, தெளிவற்ற நிலை. கொழும்பு நிர்வாக மட்டத்தில் தோன்றியுள்ளதாகவும் — கூறப்படுகிறது.

ஆனால் இது சம்பந்தமாக இங்கே அத்தியாவசியப் பொருள் விநியோகத்துக்குப் பொறுப்பான செயலகத்துக்கோ, உணவுப் பொருள்களை ஏற்றிவரும் கப்பல்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பான செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவுக்கோ எவ்வித அறிவிப்பும் இல்லை.

அவசரகாலச் சட்டம் நீக்கிவிட்டது என்பதற்காக வடபகுதி மீதான பொருளாதாரத் தடை நீக்கப்படவில்லை. கடல்வழித்தடை உத்தரவு நீக்கப்படவில்லை. அவசரகாலச் சட்டத்திலிருந்தும் வைத்தே செய்யப்பட்டவர்களையாவும் விடுவிக்கப்படவில்லை. இராணுவத்தினரின் அதிகாரங்கள் எதுவும் குறைக்கப்படவில்லை; இராணுவ நடவடிக்கைகளில் மாற்றம் எதுவும் இருக்காது — என்று ஜனாதிபதியே அறிவித்திருக்கிறார்.

அப்படியிருக்க, அத்தியாவசிய சேவை பிரிவு மட்டும் அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டதால் வலுவிழந்து செயலிழந்து விட்டதாகக் கூறுவதன் நாற்பரியம் என்ன?

தமிழர்களுக்குப் பாதகம் உண்டாக்குவதற்கு அவசரகாலச் சட்டத்திற்குப் பதிலாக சாதாரண உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. ஆனால் அவர்களின் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கு— உணவு வகைகளை அனுப்புவதற்கு — மட்டும் சட்டவலுநுட்பமாகப் பார்க்கப்படுகிறது!

தமிழர்களைப் பாதிப்படையச் செய்ய ஒரு அளவு கோல் அவர்களுக்கு வசதி செய்வதற்கு இன்னொரு அளவு கோல்.

சரி, அவசரகாலச் சட்டம் நீக்கிவிட்டதால் அத்தியாவசிய சேவைகள் நாயகம் பிரிவு செயல் இழக்கிறது என்றால், வடபகுதிக்கு உணவுப் பொருள்களை அனுப்புவதற்கு மாற்று ஏற்பாடு ஒன்று செய்ய முடியாதா? அந்தப் பொறுப்பை உணவுத் திணைக்களம் அல்லது வேறு ஒரு திணைக்களத்திடம் ஒப்படைக்க முடியாதா? சாதாரண சட்டத்தின் கீழ் அதற்கான உத்தரவைப் பிறப்பிக்க முடியாதா? மனம் இருந்தால் இடமுண்டு!

வடபகுதி மக்களுக்குரிய சேவைகளைச் செய்வதற்கு அரசு விரும்பவில்லை. பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது என்ற குழப்பத்துக்கு அதுவே பின்னணி!

அரசாங்கக் கட்சி, — ஆளுங்கட்சியான ஐ. தே. க. — பொதுத் தேர்தலில் போட்டியிடும் நான்கு தமிழ் மாவட்டங்களில் புதிதாக இரண்டு வட்சம் பேருக்கு உணவு முத்திரை வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது. அதே அரசினால் வடபகுதித் தமிழருக்கு உரிய உணவுப் பொருள்களை வழங்க நடவடிக்கை எடுக்க முடியாமற் போனது எப்படி? அது வாக்கிற்காக, இது வீம்புக்காகவா?

பரந்த அளவில் வன்முறைகளை தூண்டுவதற்கு தீயசக்திகள் முயற்சி

ஊரடங்குச்சட்ட அனுமதி அட்டைகள் குறித்து சந்திரிகா

கொழும்பு, ஜூலை 23

பரந்த அளவில் வன்முறைகளைத் தூண்டி விடுவதற்கு ஐ. தே. கவில் இருக்கும் சில தீயசக்திகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன. இதற்காகவே ஊரடங்குச் சட்ட அனுமதி அட்டைகள் பெரும் எண்ணிக்கையில் அச்சிடப்பட்டுள்ளன.

இப்படிக் கூறுகிறார் பொது மக்கள் ஐக்கிய முன்னணி உபதலைவி சந்திரிகா குமாரணதுங்க.

ஜனாதிபதிக்கு அவர் அனுப்பியுள்ள அவசர கடிதம் ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

சுதந்திரமான தேர்தலை நடத்த முனையும் இந்த வேளையில் ஊரடங்குச்சட்ட அனுமதிஅட்டைகளை அச்சிட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கேட்டுள்ளார். (இ-3)

ஊழல் புரிந்த அமைச்சர்கள் விசாரணைக்கு ஆளாவர்!

சந்திரிகா அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 23

நாட்டில் இடம்பெற்றுள்ள ஊழல்கள் மற்றும் முறைகேடுகளால் ஏற்பட்டுள்ள இழப்புகளுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்களே பொறுப்பாக்கப்படுவார்கள் என்றும் —

இவர்களின் நடத்தை பற்றி சட்டபூர்வமாக அமைக்கப்படும் விசாரணை அமைப்புகளால் விசாரிக்கப்படும் என்றும் மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா அறிவித்திருக்கிறார்;

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் அவர் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

ஊழல் புரிந்தவர்கள் எவ்வளவு வல்லமை படைத்தவர்களாக இருப்பினும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

வடக்கு — கிழக்கு யுத்தத்தை வைத்து ஆளும் கட்சி தனது அரசியல் வாழ்க்கையை நடத்தி வருகிறது.

இரணுவத்துக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் இரகசிய முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன. இந்த யுத்தத்தை நிறுத்தவேண்டும் என்று முயற்சித்தவர்கள் அனைவரும் கொலைப்படுத்துள்ளனர்.

அமைதித் தீர்வைக் காணவிரும்பிய விஜயகுமாரணதுங்கா கொல்லப்பட்டார். வேறு வழிகளில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர முயற்சித்த டெல்லி கொப்பேகடுவ, ரஞ்சன் விஜேரத்தினா ஆகியோரும் கொலைப்பட்டு விட்டனர் என்றும் அவர் கூறினார். (ஒ-எ)

தாம் போட்டியிடாத மாவட்டங்களில் பொ. ஐ. முன்னணிக்கு ஆதரவு வழங்க ந. ச. ச. கட்சி முடிவு

கொழும்பு, ஜூலை 23

கொழும்பு, வன்னி மாவட்டங்களில் தமது கட்சி வேட்பாளர்களுக்கும்—

ஏனைய மாவட்டங்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர்களுக்கும் வாக்களிக்கும்படி நவசமாசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் விக்ரமபாகு கருணாரத்தின அறிக்கைமூலம் வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நற்போதைய அரசைத் தோற்கடிப்பதற்கு இன்றுள்ள ஒரே ஒரு வழி பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு வாக்களிப்தேயாகும் என்றும் அவர் கூறினார்.

எனினும் – பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் அமைந்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படுகிறும் என்று நாம் நம்பவில்லை என்றும் அவர் கூறினார். (எ-6)

அஷ்ரப் குழுவினர் மகாநாயக்கருடன் சந்திப்பு

கொழும்பு ஜூலை 23

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிக்குழு ஒன்று காங்கிரஸின் தலைவர் எம். எச் எம். அஷ்ரப் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை வண்டியில் அஸ்கிரிய பீடாதிபதி பனிப்பான சந்தானந்த மகாநாயக்கதேரரை சந்தித்தது.

முஸ்லிம் காங்கிரஸின் கொள்கைகளை, இக்குழு மகாநாயக்க தேரரிடம் விளக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது (ஒ-எ-6)

பொருள்கள் மீதான தடைக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 23

அவசரகாலச் சட்டம் காலாவதியாகிவிட்ட பின்னரும் அவசரகாலச் [சட்டத்தின் கீழ் வடபகுதிக்கு] பொருள்களை எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை தொடர்ந்து அமுல் செய்யப்பட்டு வருகிறது. இதற்கு எதிராக மனித உரிமை மீறல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்ய கொழும்பில் உள்ள தமிழ் அரசியல் வட்டாரங்கள் ஆலோசனை நடத்தி வருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது

வடபகுதிக்கு கொண்டுசெல்ல முடியாதவை என்று அவசரகாலச் சட்டத்தின் 43 பொருள்கள் மீது தடை விதிக்கப்பட்டிருந்தது.

அவசரகாலச் சட்டம் காலாவதியானபோதும், மக்களின் அன்றாட பாவனைக்கு தேவையான மருந்துகள், தணிவகைகள், கற்பூரம், சைக்கிள், நோய்த் தடுப்பு மருந்துகள் போன்றவற்றைகூட வழங்கிவருவதுக்கு அப்பால் எடுத்துச்செல்ல இராணுவத்தினர் அனுமதி மறுப்பதாகவும —

இச்செயல் இந்நாட்டின் ஒரு பகுதி மக்களை வேண்டுமென்றே அல்லற்படவைக்கும் ஜனநாயக விரோத செயல் என்றும் – தமிழ் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

வீதிகளில் திரியும் நாய்கள் பிடிக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார பகுதியினர் கட்டாக்காலி நாய்களை பிடிக்கும் வேலையை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

பொதுமக்கள் தமது நாய்களைக் கட்டி வளர்க்க வேண்டும்; நாய்கள் வீதிகளில் திரிந்தால் அவை பிடித்துச் செல்லப்படும் என்று யாழ். மாநகர சுகாதார பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-17)

புலிகளின் குரல் வானொலியில்

23 – 07 – 1994
சனி இரவு

★ 8-01 — அறிவியற் கலசம்
★ 8-10 நிகழ்வும் பகிர்வும்
★ 8-25 - நேயர் கடிதங்கள்
★ 8-30 - செய்திகள்
★ 8-40 — சிறப்பு நிகழ்ச்சி "வெற்றியின் பாதையில் லெப்டினன்ட் செல்வக்கிளி அம்மான்"

24 – 07 – 1994
ஞாயிறு காலை

★ 7-03 — மாவீர வணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

பொலீஸ் குடும்பத்தினருடன் ரணில் கூட்டம் நடத்தினார்!

வாக்குறுதிகளையும் அள்ளி வீசினார்!!

கொழும்பு, ஜூலை 23

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் பணிப்பின் மீது நேற்று முன்தினம் கொழும்பு பொலீஸ் விளையாட்டுத்திடலில் பொலீஸ் அதிகாரிகளின் குடும்ப உறுப்பினர்கள் அழைக்கப்பட்டு, விசேட கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. பின்னர் அவர்களுக்கு தேநீர் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது.

இக்கூட்டம் தேர்தல் பணிகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் இக்னேஷியஸ் சனரத்தினத்தால் நடத்தப்பட்டது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

பொலீஸ் மா அதிபர் பிரான்டி சில்வா, பிரதிப் பொலீஸ் மா அதிபர் மிற்றா ஆரியசிங்கா ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

விசேட நிவாரணங்கள், வீடமைப்புக் கடன்கள் முதலியன வழங்கப்படும் என்று பொலீஸாரின் குறைபாடுகளுக்கு பிரதமர் கூட்டத்தில் வைத்து உறுதியளித்தார்.

பிரதமரின் இச்செயல் குறித்து பொலீஸ் சேவையில் உள்ள சில பிரிவினர் அதிருப்தியும் கவலையும் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் தேர்தலில் பொலீஸாரின் ஆதரவைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட யுக்திய இக்கூட்டம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ஒ-எ-6)

ஜனாதிபதி முறையை ஒழிக்க பொதுமக்களின் ஆணையை கோருகிறது எதிரணி!

கொழும்பு ஜூலை 23

நற்போதைய நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றுவதற்கு மக்களிடமிருந்து ஆணை கோருவதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் 40 பக்க தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்திருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆணை எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்களிடமிருந்து கிடைத்ததும், புதிய நாடாளுமன்றம் சாதாரண பெரும்பான்மையுடன் நற்போதைய அரசமைப்பு முறையை மாற்றும் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அரசமைப்பு ஆலோசகரான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டின், நவம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறாது என்றும் அவர் கூறினார்.

சிறுபான்மை இனத்தவர்களின் நியாயமான உரிமைகளை வழங்குவதற்கு ஜனநாயக அமைப்புகளுள், கூடிய சுதந்திரமுள்ள நிர்வாக அமைப்புக்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தயாராக இருப்பதாகவும் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார். (ஒ-எ-6)

வானமே இடிந்துவிழுந்தாலும் நாட்டைப் பாதுகாப்பேன்!

கொலன்னேயில் மேடைசரிந்த பின் டி.பி.

மேடைமட்டுமல்ல, வானமே இடிந்து விழுந்தாலும் இந்த நாட்டைப் பாதுகாப்பேன் இந்த நாட்டைப் பிரிக்க இடமளிக்கமாட்டேன்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா முன்னாள்வாறு தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமைகொலன்னேயில் நடைபெற்றஐ தே.க. பிரசாரக் கூட்டத்தில் இடைநடுவில் கூட்டமேடைஇடிந்து விழுந்த பின்னர், அங்கு திரண்டிருந்த மக்கள் மத்தியில் பேசுகையில் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

என்ன இடர்கள் நேரிடினும் கொலன்னே மக்களைத் தாம்மாறாதாகவும் அவர் தெரிவித்தார்.

மேடை இடிந்து விழுந்ததை அடுத்து கொலன்னே யாக்கோபு ஆலய 166 ஆவது ஆண்டு விழா

நல்லூர் பரி. யாக்கோபு ஆலய 166 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், உயிர் மீட்சிக் கூட்டங்களும் இன்று சனிக்கிழமையும், ஞாயிறு, திங்கட்கிழமைகளும் நடைபெறவுள்ளன.

இன்று காலை 7.00 மணிக்கு அருட்திரு எஸ்.பி. நேசகுமார் அடிகளார் ஆரம்ப ஆராதனையையும் அருளுரையையும் நிகழ்த்துவார்.

பேராயர் கலாநிதி வண. செ. தா. தலைமையில் பாடசாலை நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ச-90)

★ ★ ★

நவக்கிரி எக்கானை சனசமூக நிலைய வாணி பாடசாலை மாணவர்களால் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நவக்கிரி ஆலயத்தில் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மைதானத்தில் பாலர் பாடசாலைத் தலைவர் து. பாலையா தலைமையில் நடைபெறும். இவ்விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் சனசமூக அபிவிருத்தி உதவி யோகத்தர் திரு செ. தயாநந்தம் கலந்துகொள்வார்.

வீரச்சாவு

கடந்த 5 ஆம் திகதியன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற தாயகத்தான வெடிவிபத்தில் வடுதலைப் புலிகள் இயக்க பேராளியான வீரவேங்கை புக்கன் அல்லது விஜி (ஜெயராம் ஜெயசீலன் — மட்டக்களப்பு) வீரச்சாவு அடைந்தார்.

மட்டு, திருமலையில் தேடுதல்

கொழும்பு, ஜூலை 23

கிழக்கில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் பாதுகாப்புப் படையினர் கடந்த திங்கட்கிழமை தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் புலிப்பாய்ந்தகல் பகுதியையும் —

திருகோணமலையில் வெருகல், முத்துவாரம் பகுதியையும் — படையினர் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தி பலரை சோதனை செய்து முகாம்களுக்குக் கொண்டு சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

இன்று

கிரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய வாணி பாடசாலை கிளையாட்டுப் போட்டி இன்றுகாலை 8.00 மணிக்கு பாடசாலை பிரதம ஆசிரியை திருமதி வரதராஜா ரஞ்சினிதேவி தலைமையில் நிலைய மைதானத்தில் நடைபெறும் (ஒ)

★ ★ ★

மானிப்பாய் சத்தியா பாலர் பாடசாலை மாணவர்களின் கிளையாட்டு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு திருமதி எம். சேதுராமன் தலைமையில் பாடசாலை நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ச-90)

★ ★ ★

நவக்கிரி எக்கானை சனசமூக நிலைய வாணி பாடசாலை மாணவர்களால் இல்ல விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நவக்கிரி ஆலயத்தில் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மைதானத்தில் பாலர் பாடசாலைத் தலைவர் து. பாலையா தலைமையில் நடைபெறும். இவ்விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் சனசமூக அபிவிருத்தி உதவி யோகத்தர் திரு செ. தயாநந்தம் கலந்துகொள்வார்.

யாக்கோபு ஆலய 166 ஆவது ஆண்டு விழா

கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ். மாவட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளை யாழ் மாவட்ட ஆமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் எதிர்வரும் செப்டம்பர் 9, 10, 11, ஆம் திகதிகளில் யாழ். மருதனார்மடம் மைதானத்தில் நடத்துவதாகவுள்ளது.

18 வயதின் கீழ், 20 வயதின் கீழ் என இரு வயதுப்பிரிவுகளில் ஆண் பெண் இருபாலாருக்கும் தனித்தனியாக போட்டிகள் நடைபெறும்.

இப்போட்டிகளுக்கு விண்ணப்பிப்பது தொடர்பான மேலதிக விவரங்களை யாழ் மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் விரைவில் அறிவிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகள், அழகுக்கலை நிலைய வாடாக அல்லது தனிப்பட்ட முறையில் மெய்வல்லுநர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றலாம்.

விசேட ஆங்கிலக் கற்கை நெறி

யாழ். பல்கலைக்கழக புற நிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் மக்கள் வங்கித் தலைமையகத்தின் வேண்டுகோளுக்கிணங்க விசேட ஆங்கில கற்கைநெறி ஒன்று யாழ். மக்கள் வங்கியின் கிளைகளில் பணியாற்றுவோருக்காக நடத்தப்படவுள்ளது.

தொடர்ந்து ஐந்து மாதங்கள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கல்லூரிக்கழகத்தில் இடம்பெறவுள்ள இக் கற்கை நெறியின் ஆரம்ப வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (ஒ)

எவரும் தோல்வி அடையாத சமாதானம் நாட்டுக்குத் தேவை

குபவாஹினியில் ஜே.வி.பி. பிரமுகர் உரை

கொழும்பு, ஜூலை 23

எங்கள் நாட்டுக்குச் சமாதானம் அவசியமானதாகும். அது எவரையும் தோல்வியுறச் செய்யும் சமாதானமாக இருக்கக்கூடாது; அனைவருக்கும் கௌரவமான சமாதானமாக அமைய வேண்டும்.

குபவ ஹினியில் கடந்த வியாழன் இரவு நேர்தல் பிரசார உரை நிகழ்த்திய ஜே.வி.பியின் மக்கள் முற்போக்கு முன்னணிப் பேச்சாளர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

இத்தகைய சமாதானத்தை 7 ஆண்டுகளாக சாப ஆட்சியாளர்களோ அல்லது 17 ஆண்டுகளாக சாப ஆட்சியாளர்களோ ஏற்படுத்த முடியாது. ஏனென்றால் இந்த இரு பகுதியினரும் தான் இன்றைய நிலைமைக்குப் பொறுப்பாளிகள்.

அவர்களின் தவறுகளினாலேயே இன்றைய பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன என்றார். (ஒ-எ-6)

பனைத்துறை ஆய்வு மையங்கள் அவசியம் நிறுவப்பட வேண்டும்

முதமிஞர் குலரத்தினம் நினைவுப் பேருரையில் பேராசிரியர் யோசனை

யாழ்ப்பாணம், ஜூலை 23

பனைத்துறை வளர்ச்சி தொடர்பான ஆய்வு மையங்கள் நிறுவப்படவேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக பொருளியற்துறைத் தலைவர் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் யோசனை தெரிவித்திருக்கிறார்.

முதமிஞர் க. கி. குலரத்தினம் நினைவுப் பேருரை நிகழ்த்துகையில் அவர் இக் கருத்தை வெளியிட்டார்.

யாழ். மாநகரசபைப் பொன் நூலகத்தில் நல்லூர்க் கிராமிய கலாசாரப் பேரவையினால் நடாத்தப்பட்ட 14 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்ச்சியில் "பனை வளமும் தற்சார்பு பொருளாதாரமும்" என்ற தலைப்பில் அவர் நினைவுப் பேருரையை நிகழ்த்தினார்.

"தமிழ்ப் பிரதேசங்களின் பாரம்பரிய வேளாண்மையத் திற்கான கிராமப் பொருளாதாரத்தின் அத்தியாவசிய துறையாக பனைத் துறை விளங்குகிறது. இத் துறையில் எதிர்காலத்தில் நாட்டு மிடும் போது பொருளாதார அபிவிருத்தி, தற்சார்பு முன்னேற்றம் கிடைக்கக்கூடிய தான, ஆய்வுரீதியான விளக்கங்களைப் பெற்றுக்கொள்வது முக்கியமாகும்" — என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாநகர ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் தமது தலைமையுரையில் —

மாநகர நூலக வளர்ச்சியில் அமரர் குலரத்தினம் அக்கறையுடன் செயல்பட்டார் என்றார்.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், நூலக மண்டபத்தில் முதமிஞர் குலரத்தினத்தின் திரைக்கோலம் செய்து பட்டதை திரைநீக்கம் செய்து வைத்தார்.

பேரவைத் தலைவர் பேரவைச் செயலாளர் நன்றியுரை நிகழ்த்தினார். (எ-111)

பொருளோடு பெண் வேண்டும் எனக் கேட்கும் மதியீனம் இருக்கும் மட்டுமே இது என்றும் வழிகோலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதி விளக்குகளை உடைத்து சேதமாக்கும் விஷமிகள்!

3 வாரங்களில் 12 லாம்புகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் வீதி விளக்குகள் விஷமிகளால் சேதமாக்கப்பட்டு வருவதாக புகார் கூறப்படுகிறது.

கடந்த மூன்று வாரங்களில் மட்டும் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட வீதி விளக்குகள் உடைக்கப்பட்டு அதற்குள் இருக்கும் சிமிலி லாம்புகள் திருடப்பட்டுள்ளன.

விஷமிகளின் இந்த அட்டூழியச் செயலை பொது மக்களும், பொது அமைப்பைச் சேர்ந்தவர்களும் முறியடிக்க முன்வர வேண்டும் என்று மாநகரசபை மன்றமிலிருந்தான பொறியியலாளர் திரு. வே. நவரத்தினராசா கேட்டுக்கொண்டார். (ஒ-17)

ஓம் முருகா

மீசாலை பன்றிக்கேணி கந்தசாமி ஆலய

தேர் உற்சவம்

இன்று (23_07_94) காலை 8 00 மணி

மெய்படியார்கள் அனைவரும் வருக

உபயகாரர்கள்

மீசாலை. (இ/8780)

11ஆம் ஆண்டு நினைவில்...

(23 07.1994)

விடுதலைப் புலிகளின் கெரில்லாத் தலைவர்

லெப்டினன்ட் செல்லக்கிளி அம்மான்

(சதாசிவம் செல்வநாயகம் — திருநெல்வேலி கிழக்கு)

இலட்சிய வேங்கைகள் இறப்பதுமில்லை!
விடுதலைப் புலிகள் வீழ்வதுமில்லை!

பழைய மாணவர் சங்கம்
செங்குந்த இந்துக்கல்லூரி
திருநெல்வேலி கிழக்கு (சி/8779)

மரண அறிவித்தல்கள்

தம்பிப்பிள்ளை காங்கேசு

(இளைப்பாறிய உத்தியோகத்தர் - வீதி அபிவிருத்தி அதிகார சபை - யாழ்ப்பாணம், வவுனியா)

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை காங்கேசு 22 - 07 - 94 அன்று காலமாகியிட்டார்.

அன்னார் திருமதி யோகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - பொன்னம்மாவின் அருமை மகனும், செல்வி ஜெயந்தி (வீதி அபிவிருத்தி அதிகார சபை வவுனியா), செல்வன் தயபரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தமையி இராசையா (அவுஸ்திரேலியா), நாகம்மா சந்தையா, பரமேஸ்வரி இராசதுரை, பொற்கொடி ஜெயநாதன், சுரேஸ்வரி நவரத்தினம் (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற முத்தத்தம்பி - தங்கமுத்துவின் மருமகனும் காலஞ்சென்ற முத்தத்தம்பி அருணாசலம், மனோமணி நடராசா, புவனேஸ்வரி சபாநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ச. க. சபாநாதன்

"அருணா"
பலாலி வீதி,
உரும்பராய் தெற்கு,
உரும்பராய். (32053)

முத்தையா கமிலேல் இம்மானுவேல்

(யாழ்ப்பாணம் பிரதான வீதி, 141 இலக்கத்திலுள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்)

முத்தையா கமிலேல் இம்மானுவேல் 21-7-94 இல் காலமானார்.

இவர் வசந்தியின் அன்புக் கணவரும், தயாளனின் (சம்பத்தறிசியார் கல்லூரி மாணவன்) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திரு திருமதி முத்தையா அரசரட்னத்தின் மகனும், திரு திருமதி அந்தோனிப்பிள்ளை (சின்னத்துரை), திரு செல்வரத்தினம் ஆகியோரின் மருமகனும், திருமதி சி. றோன்மலரின் சகோதரனும், மகேந்திரா (கொழும்பு), அழகேந்திரா (கொழும்பு), சந்திரா (கொழும்பு), பாலேந்திரா ஆகியோரின் மைத்துனரும் திரு. திருமதி செபமாலை (பாக்கியம்) அவர்களின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 23-7-94 சனி பி. ப. 3 மணி யளவில் 26 (51), மத்தியூஸ் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து நல்ல சுகத்துக்காக கொழும்பு செஞ்சிலுவை மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:-
திரு. ச. அந்தோனிப்பிள்ளை (மாமன்)
26, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம். (32057)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 23 - 07 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

லெப். செல்லக்கிளி நினைவு நாள் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 23
1983 ஜூலை 23 ஆம் திகதி திருநெல்வேலியில் படையினரால் நடத்தப்பட்ட கண்ணிவெடித்தாக்குதல் சம்பவத்தில் வீரச்சாவடைந்த லெப்டினன்ட் செல்லக்கிளி அம்மானின் 11 ஆம் ஆண்டு நினைவுநாள் இன்றாகும்.

இதனையொட்டி இந்து காலை 9 மணியளவில் திருநெல்வேலி தபாலகட்டை சந்திக்கு அருகில் உள்ள நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தப்படும். தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு கல்வியங்காடு சந்திக்கு அருகில் உள்ள செல்லக்கிளி அம்மான் நினைவாலயத்தில் மலரஞ்சலி செலுத்தும் வைபவம் இடம் பெறும்.

நினைவு அஞ்சலிக் கூட்டம் இன்று இரவு 7 மணிக்கு திருநெல்வேலி கிழக்கு வாலிப மன்ற சனசமூக நிலைய முன்றலில் நடைபெறும். நினைவுரைகளைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் அங்கு இடம்பெறும்.

வலிகாமம் கோட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி பவரசி தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் உறுப்பினர் திரு. அப்பையா, செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜனனி, விடுதலைப் புலிகள் உறுப்பினர் திரு தேவர், யாழ்ப்புலிகள் அரசியற் பயிற்சிப்பள்ளிப் பொறுப்பாளர் திரு. வாஞ்சிநாதன் ஆகியோர் நினைவுரை நிகழ்த்துவார்கள். (ஐ-8)

சுழலும் சொற்போர் கம்பன் விழாவில் இன்று

மாலை கவியரங்கு நிகழ்ச்சி

அகில இலங்கை கம்பன் கழகத்தின் கம்பன் விழா நான்காம் நாள் நிகழ்ச்சிகள் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும்.

திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தொடக்கவுரையை வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி செல்வரூபி விக்கிரராஜாவும், வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதனும் ஆற்றுகுவார்கள்.

"இராமனின் பெருந்தன்மை மெரிதும் வெளிப்படுதல் யார் முன்" என்னும் பொருளில் சுழலும் சொற்போர் இடம்பெறும்.

மாலை நிகழ்ச்சிகள் பி. ப. 4.30 மணிக்கு திரு. ஆர். தேவீஸ்வரன் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

இயல்திசை வாரிதி பிரம்மஸ்ரீ நவரத்தினராஜா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் தொடக்கவுரையை வைத்திய கலாநிதி செ. கு. நந்திவர்மனும் வாழ்த்துரையை கலாநிதி க. குணராசாவும் நிகழ்த்துவார்கள்.

திரு. க. சிவராமலிங்கம் தலைமையில் நடைபெறும். இளைஞர் அரங்கில் "கம்பசாரம்" அந்நாளில் கருத்தரங்கும்— "கம்பன் அரங்கில் கவிபாடும் உரிமையினை எங்களுக்குத் தாரும் இனி" என்னும் பொருளில் தேர்வு நேர்காணற் கவியரங்கு கவிஞர் முருகயன் தலைமையில் நடைபெறும். [ஐ-111]

மடு யாத்திரைக்கு அனுமதி

கொழும்பு, ஜூலை 23
பல ஆண்டுகளுக்குப் பின்னர் மடுத்திருப்பதிக்கு யாத்திரை செல்ல இவ்வாண்டு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புனித மடுத்திருப்பதியில் உள்ள தற்போதைய தேவாலயம் புனிதப்படுத்தப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவுறுவது குறித்து எதிர்வரும் அக்டோபர் மாதம் ஏழாம் திகதி நடைபெறும்.

திருவிழாவுக்கு வடக்கிலிருந்தும் தெற்கில் இருந்தும் யாத்திரிகர்கள் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி வண. ராயப்பு யோசப் ஆண்டகை செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ-6)

விளையாட்டு நிகழ்வுகள்

புத்தூர் கலைமதி சனசமூக நிலையத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி திருவாளர்கள் பொ. தர்மு. வை. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் ஞாபகார்த்தமாக கலைமதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டப் (செற்றப்) கற்றப் போட்டிகளில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ யாழ். ஐங்கரன் வி.க அணி எதிர் மட்டுவில்மோகன தாஸ் வி.க

★ கரியானை ஐக்கிய வி.க அணி எதிர் கே. கே. எஸ். ஐக்கிய வி.க. அணி. (ஐ-20)

★ ★ ★

கைதடி தெற்கு மின்னொளி சனசமூக நிலையத்தின் 39 ஆவது அகவை விழாவை ஒட்டி மின்னொளி விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கரப்பந்தாட்ட கற்றுப் போட்டியில் (செற்றப்) இன்றுநடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணி—யாழ். ஐங்கரன் வி.க 'ஏ' அணி எதிர் நீர்வேலி ஐக்கிய வி.க. 'ஏ' அணி

★ பிற்பகல் 4 மணி — ஆவரங்கால் மத்திய வி.க. 'ஏ' அணி எதிர் நாவன்மார் கட்டு பாரதி வி.க. பி.அணி.

★ ★ ★

கே.சீ.சீ விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் கற்றுப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறவுள்ள காலை இறுதி ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகள் விபரம் வருமாறு:-

★ காலை 8 30 மணி — சென்றலைட் 'சொக்ஸ்' அணி எதிர் மாவிப்பாய் யுனிஸ் 'பி' அணி.

★ பிற்பகல் 1.30 மணி — ஜொலியன்ஸ் அணி எதிர் ஜொலிஸ்ரார்ஸ் அணி.

★ ★ ★

யாழ். மாவட்ட [illegible] நாட்டை சங்கம் யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் நடத்தும் வலைப்பந்தாட்டப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விபரம் வருமாறு;-

★ முற்பகல் 8.30 மணி — இற்ஸ்கொப்பரிஸ் வி.க அணி எதிர் சென்றீக்கன் வி.க. அணி.

★ முற்பகல் 8 மணி — பருத்தித்துறை ஐக்கிய வி.க. அணி எதிர் அரியரான ஐக்கிய வி.க. அணி.

★ முற்பகல் 10 மணி — அரியரான ஐக்கிய வி.க அணி எதிர் பமிலிடஸ் வி.க அணி

★ முற்பகல் 11 மணி — யுதிகாமல் வி.க. அணி. (ஐ)

★ ★ ★

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகம் 'பாரதி' கற்றுக் கேடயத்துக்காக யாழ் மாவட்ட மட்டத்தில் நடத்திய கரப்பந்தாட்ட கற்றுப் போட்டியின் (செற்றப்) காலிறுதியாட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி — பாரதி விளையாட்டுக் கழகம் 'பி' அணி எதிர் கே.கே.எஸ் ஐக்கிய வி.க அணி.

★ பிற்பகல் 4 30 மணி — பாரதி விளையாட்டுக்கழகம் 'ஏ' அணி எதிர் மட்டுவில் கலைவாணி வி.க, அணி. எதிர் சென் அன்ரலீஸ் வி.க. அணி. (ஐ)

ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜூலை 23
வவுனியா இணைக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு எழுவைதீவு முன்பாகவுள்ள நியூ மான்ரர் கலவி நிலையத்தில் [illegible] மாணவர் அமைப்பு [illegible] என அறிவிக்கப்படுகிறது. (ஐ)

மீண்டும் வன்செயல்களை ஏற்படுத்துவதற்கு முயற்சி

ஐ. தே. க - எதிரணி பிரஸ்பரம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 23
இனங்களுக்கிடையில் மீண்டும் வன்செயல்களை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டி வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐ. தே. க. உறுப்பினர்களை பயமுறுத்தும் நடவடிக்கைகளில் எதிரணி ஈடுபட்டுவருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது போன்ற பொய்ப் பிரசாரத்தை பிரதமர் மேற்கொண்டு வருகின்றார் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளர் டி. எம். ஜயரத்னா பதிற்குற்றஞ் சுமத்தியிருக்கிறார்.

இதனிடையில் எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் — கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டு, பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள பொலீஸ் அதிகாரி ஒருவரை தேர்தல் காலத்தில் அரசாங்கம் மீண்டும் சேவைக்கு எடுத்திருப்பது, சுதந்திரமாக அமையவேண்டிய தேர்தலை நடத்துவதற்குத் தடையாக இருக்கப்போகிறது என்று குற்றஞ்சாட்டியுள்ளார். (இ-எ-6)

ஆயிரக்கணக்கான றுவாண்டா அகதிகள் கொலராவுக்கு பலி!

அகதி முகாம்கள் பிணக்காடாகக் காட்சி

ஸயிரில் உள்ள றுவாண்டா அகதி முகாம்களில் கொலரா நோய் (வாந்திபேதி) வேகமாகப் பரவி வருகிறது. ஆயிரக்கணக்கான அகதிகள் கொலராவுக்குப் பலியாகி வருகின்றனர்.

றுவாண்டாவில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது உயிரைப் பாதுகாப்பதற்காக அண்டை நாடான ஸயருக்குள் அகதிகளாக வந்தவர்களே கொலராவுக்குப் பலியாகி வருகின்றனர்.

துட்சி சிறுபான்மை இனத்தவரின் ஆதிக்கத்தில் உள்ள றுவாண்டா தேசத்தில் முன்னணி றுவாண்டா உள்நாட்டு யுத்தத்தில் வெற்றியீட்டியதை அடுத்து பெரும்பான்மை ஹுத்து இன மக்கள் பெரும் அளவில் ஸயர் நாட்டுக்குள் இடம் பெயர்ந்திருந்தனர்.

இப்படி இடம் பெயர்ந்தவர்களும் இறுதிச் சண்டையில் கொல்லப்படலாம் என்று அஞ்சி இடம்பெயர்ந்த சிறுபான்மை துட்சி இன மக்களுமாக மொத்தம் 10 லட்சம் றுவாண்டா மக்கள் தற்போது ஸயரில் அகதிகளாக இருந்து வருகின்றனர்.

தற்போது ஸயரில் உள்ள அகதி முகாம்களில் கொலரா பரவ ஆரம்பித்ததை அடுத்து அகதிகளில் பலர் மீண்டும் றுவாண்டாவுக்குள் திரும்பிச் செல்ல முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே உள்நாட்டு யுத்தத்தினால் றுவாண்டாவில் நூற்றுக்கணக்கான குழந்தைகள் அனாதைகளாகி உள்ளனர். கொலரா நோய் காரணமாக அனாதைக் குழந்தைகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்து வருகிறது.

வீதிகளிலும், அகதி முகாம்களிலும் சடலங்கள் குவிந்து கிடப்பதால் நிவாரணப் பணிகள் தாமதமடைந்து வருகின்றன.

றுவாண்டா உள்நாட்டு யுத்தத்தில் 5 லட்சம் மக்கள் வரை கொல்லப்பட்டதாகத் தெரிந்தது. (இ)

முஸ்லிம் காங்கிரஸ்— பொ. ஐ. மு உடன்பாட்டை பகிரங்கப்படுத்துக

தினேஷ்குணவர்த்தனா கோரிக்கை

கொழும்பு, ஜூலை 23
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் செய்து கொண்ட இரகசிய தேர்தல் உடன்பாட்டை பகிரங்கமாக வெளியிடும்படி பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு கடிதம் ஒன்றை ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ்குணவர்த்தனா சமர்விடுத்துள்ளார்.

இந்த உடன்பாட்டின் கீழ் வடக்கு-கிழக்கு இணைப்பை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஏற்றுக் கொண்டுள்ளது என்றும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைக்கும் கொள்கையை எந்தத் தேசிய அரசியல் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளவில்லை. இணைப்பு விஷயத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கொள்கையில் தெளிவற்ற தன்மை இருந்ததால்தான் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் தமது கட்சி உடன்பாடு காணமுடியாது போய்விட்டதாகவும் அவர் கூறினார். (இ-எ)

காயமடைந்தவர் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23
பண்டத்தரிப்பு பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் மேற்கொண்ட முன்னேறும் முயற்சியின் போது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் காயமடைந்த ஒருவர் வடலியடைப்பு பகுதியில் இருந்து நேற்று மீட்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

வடலிய டப்பு கலைவாணி சன சமூக நிலையத்துக்கு அருகில் தனது வீட்டில் காயமடைந்த நிலையில் காணப்பட்ட இவர் நேற்று அங்கு சென்ற அவரது உறவினர்களால் மீட்கப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த நாகலிங்கம் மாணிக்கவாசகர் (வயது 49) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார். (ஐ-15)

ஆலயங்களில்

சாவகச்சேரி வடக்குபகுதி கேணி சந்தைவாமி கோவில் இரதோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கும், தீர்த்தோற்சவம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கும் நடைபெறும். (ஐ-31)

★ ★ ★

சாவகச்சேரி ஸ்ரீ பழனி ஆண்டவர் தேவஸ்தானத்தின் 5 ஆவது ஆண்டு ஆடிவேல் விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

முத்துச் சப்பறத்தில் முருகப்பெருமானின் வேல் நகரில் வலம்வரும் வைபவமும் இடம் பெறும். (ஐ-31)

தீர்த்தக்கேணி அடித்தளம் திருத்தப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 23
கல்லூரன்றி புனித தீர்த்தக் கேணியின் அடித்தளம் மடிடப்படுத்தப்படவுள்ளது—

பல வருடங்களாக தீர்த்தக் கேணி சரியாகப் பராமரிக்கப்படாததால் அதன் அடித்தளம் ஒரே மட்டமாக இல்லாமல் மேடும் பள்ளமுமாக இருக்கிறது. இக்குறையை நீக்கும் பொருட்டு அடித்தளத்தை மடிடப்படுத்தும் ஆரம்ப வேலைகள் இன்று தொடங்கப்படுகின்றன.

புனித தீர்த்த பரிபாலன சபைத் தலைவர் கலாநிதி க. குணராசா மடிடப் பணிகள் ஆரம்ப வேலையை இன்று காலை 7 மணிக்குத் தொடக்கி வைப்பார்.

அடித்தள மடிடப்படுத்தல் வேலைகளுக்காக புனித தீர்த்தக்கேணிப் பாவனை மூன்று நாட்களுக்கு நிறுத்தப்படும். எவ்வித அத்தியேட்டிக் கிரியைகளும் செய்ய கொள்ளமாட்டாது என அறியக்கப்படுகிறது. (அ)

தமிழி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ திங்கள் காலை 9மணிக்கு பவனி ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி வழியாக நண்பகல் 12 மணிக்கு விநாயகர் ஆலயத்தைச் சென்றடையும். அங்கிருந்து 2 மணிக்கு புறப்பட்டு யாழ்நகர் வீதிகளூடாக இரவு 7 மணிக்கு வண்ணை, கிளிச் கோவிலை அடையும்.

★ செவ்வாய் காலை 6 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு காங்கேசன்துறை வீதி வழியாக பகல் 12 மணிக்கு வண்ணை நாச்சிமார் அம்மன் ஆலயத்தைச் சென்றடையும். அங்கிருந்து பி. ப. 3 மணிக்கு புறப்பட்டு இரவு 7 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தை அடையும்

★ புதன் காலை 9 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு திருநெல்வேலி வழியாக அரசடி சிவகாமி சந்தி அம்மன் ஆலயத்தை பகல் 12 மணிக்குச் சென்றடையும். மாலை 5 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கலியாணகாடு ஊடாக இரவு 7 மணிக்கு ஆலயத்தை அடையும். (ஒ-3)

விண்ணப்பம்

1993 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடத்த ஜி. சீ. ஈ (உயர்தர) பரீட்சையில் தோற்றியவர்கள் பல்கலைக்கழக அனுமதி கோரும் விண்ணப்பப்படிவங்கள் யாழ். பல்கலைக்கழகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன. (ஒ-3)

கிழக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தவை தேர்தல் நடவடிக்கையின் மத்தியில் படையினரின் தொல்லை அதிகரித்து வருகிறது. விடுதலைப்புலிகளைத் தேடுவது என்ற போர்வையில் தேடுதல்கள், கறுப்பு ஆடைப்புகை, வாகன எண்பனவற்றில் படையினர் அடிக்கடி ஈடுபடுகின்றனர்.

மிகக்குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் தமிழ் இளைஞர், யுவதிகள் பெரும் எண்ணிக்கையில் வரை செய்யப்படுகின்றனர் ஏற்கனவே வரை செய்யப்பட்டுவிடுவிக்கப்பட்டவர்கள் மீண்டும் மீண்டும் வரை செய்யப்படுகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் ஆக்கரைப்பற்றுப் பிரிவில் பன்னிரண்டாட பகுதியில் பகல் என்றும் இரவென்றும்பாராது தேடுதல் நடவடிக்கைகளால் தமிழர்களின் வீடுகளுக்குச்செல்லும் அதிரடிப் படையினர் தமிழ்ப் பெண்களை இம்சைப் படுத்துகின்றனர். பாலியல் வன்முறைகளில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு படையினரால் இம்சைப்படுத்தப்பட்டவர்களில் ஒருவரான ஆக்கரைப்பற்றைச் சேர்ந்த குடும்பப் பெண்ணான திருமதி குமாரவேல் பார்வதி என்பவர் கடந்த 16 ஆம் திகதி தற்கொலை செய்துகொண்டார்.

படையினரின் இந்த அட்டூழியம் குறித்து பொலீஸ் அதிகாரிகளுக்கு கொண்டுவரப் பட்டிருப்பதாக அறியவருகிறது. (அ)

ஆசிரிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்படவுள்ள புதிய சம்பள திட்டம் வருமாறு:-

1 ஆம் தரம் — ரூ 72,000-108,000 [10 X 3600]
2 ஆம் தரம் ரூ 55,200-72,000 (7 X 2400)
3 ஆம் தரம் ரூ 42,000-54,600 [3 X 1200+3X1800 + 2 X 2400]
4 ஆம் தரம் - ரூ 36,000-41,400 (5 X 1080)
5 ஆம் தரம் - ரூ 27,000-30,000 [5 X 600]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org